தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.07.2013**

**பாதி விலையில் பழமரக் கன்றுகள் விநியோகம்**



தோட்டக்கலைத் துறை மூலம் 50 சதவீத மானிய விலையில் பழமரக் கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு நெல்லி, சப்போட்டா, முந்திரி, மா போன்ற பழமரக் கன்றுகள் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படவுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் தேவையைப் பதிவு செய்து கொள்ளலாம்.


பழங்கள் எளிய சர்க்கரைகளைக் கொண்டுள்ளதால், ஆற்றலும் புத்துணர்ச்சியும் தரவல்லவை. உடல் நலனுக்குத் தேவைப்படும் வைட்டமின்களையும், தாது உப்புகளையும், இதர சத்துக்களையும் பழங்கள் மிகுதியாகக் கொண்டுள்ளன.

குடல் நலனுக்கும் உதவும். மலச்சிக்கலைத் தீர்க்க வல்லவை. வணிக நோக்கில் அதிக லாபத்தை நீண்ட நாள் தரக்கூடியவை. அடுத்த தலைமுறைக்கும் பலன் தரவல்லவை.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த நெல்லி, சப்போட்டா, முந்திரி, மா போன்ற பழமரக் கன்றுகள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உள்ள வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவைப்படும் பழமரக் கன்றுகளைப் பதிவு செய்து கொள்ளலாம்.

சேரன்மகாதேவி வட்டார விவசாயிகள் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் அமைந்துள்ள வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். எனவே, விவசாயிகள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாதி விலையில் பழமரக் கன்றுகளைப் பெற பதிவு செய்து கொண்டு அவற்றை பாதி விலையில் பெற்றுப் பயன் பெறலாம் என்றார் அவர்.

**பருத்தியில் தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்துதல்!**



பருத்தியில் தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. பருத்தியில் தத்துப் பூச்சியின் தாக்குதல் அதிகமாக தென்படுகிறது.

சேத அறிகுறிகள்: தத்துப் பூச்சியானது பருத்தி தவிர நிலக்கடலை, ஆமணக்கு, கத்திரி, வெண்டை போன்ற பயிர்களையும் தாக்குகிறது. இளம் மற்றும் வளர்ச்சி அடைந்த பூச்சிகள் இலைகளிலுள்ள சாற்றை உறுஞ்சுவதால், இலைகளானது சுருண்டு விடுகின்றன. மேலும் இலைகளின் ஓரங்கள் காய்ந்து, தீய்ந்ததுபோல் காணப்படுகின்றன. இதன் தாக்குதல் அதிகமாகும்போது இலைகள் காயந்து பின்னர் உதிர்ந்து விடுகின்றன.

மேலும் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பூ மற்றும் காய் பிடிப்பது குறைகிறது. பருத்தி பஞ்சின் தரமும் குறைகிறது. இதன் தாக்குதலால் சுமார் 35 சதவிகிதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

வாழ்க்கை பருவம்: பெண் பூச்சியானது சுமார் 13 முட்டைகளை இலைகளுக்கு அடியில், இலை நரம்புகளில் இட்டுச் செல்கின்றன. முட்டைப் பருவமானது 4 முதல் 11 நாள்கள் ஆகும். முட்டையிலிருந்து வெளியேவரும் இளம் பூச்சிகளின் பருவமானது 21 நாள்களில் முடிவடைந்து வளர்ச்சி அடைந்த பூச்சியாக மாறுகிறது. பூச்சியானது இளம் பச்சை நிறத்தில் இருக்கும். இவை பக்கவாட்டில் நகரும் தன்மை கொண்டது.

கட்டுப்படுத்தும் வழிகள்: ஒருகிலோ பருத்தி விதைக்கு இமிடாகுளோபிரிட் 70 டபிள்யூஎஸ் 5 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயறு வகைகளை ஊடுபயிராகப் பயிரிட்டு நன்மை செய்யும் பூச்சிகளை அதிகப்படுத்த வேண்டும். பொருளாதார சேத நிலையை தாண்டும்போது பூச்சிக் கொல்லி மருந்துகளை பரிந்துரைக்கப்பட்ட அளவு தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு இமிடாகுளோபிரிட் 200 எஸ்எல் 100 மிலி அல்லது அசிட்டமிபிரிடு 20 எஸ்பி 50 கிராம் அல்லது புரபனோபாஸ் 50 இசி 1000 மிலி அல்லது டைமீத்தோயேட் 30 இசி 600 மிலி மருந்தை தெளிக்க வேண்டும் என்றார் அவர்.

**விதைப் பரிசோதனையின் முக்கியத்துவம்**



விதை பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் மூ.மு. முகம்மது காசீம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலவன் பரிசோதனை செய்யப்படுகிறது. பயிர் சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருள்களில் முதன்மையானது விதை. அந்த விதை நல்ல தரமானதாக இருந்தால்தான் மகசூல் அதிகமாக கிடைத்து வருமானம் அதிகரிக்கும்.

பயிர் அறுவடை முடிந்து கதிரடித்து பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதை குவியல்களில் இருந்து கிடைக்கும் விதைகள் உடனடியாக விதைப்பதற்கு தகுதியானதாக இருக்காது.

அந்த விதைகளுடன் மண், சிறுகற்கள், இலைகளின் துகள்கள், குச்சி, சாவி கலந்தவையாக இருக்கும்.

எனவே விதைக்காக அறுவடைச் செய்யும் விதைகளை அறுவடை முடிந்தவுடன் காயவைத்து சுத்திகரிப்பு நிலையம் சென்று சுத்திப்பணி செய்ய வேண்டும். இந்த குவியலில் இருந்து மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். திருநெல்வேலி விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் பரிசோதிக்கப்படும்

புறத்தூய்மை சோதனையின்போது தூய விதைகள், களை விதைகள், பிறதானிய விதைகள் மற்றும் உயிர்பற்ற பொருள்கள் கலந்துள்ளனவா என்று கண்டறியப்படுகிறது.

நெல், பயறுவகை, சிறுதானியம், சூரியகாந்தி, பருத்தி பயிர்களுக்கு புறத்தூய்மை 98 சதவிகிதம் இருத்தல் வேண்டும். எனவே சேமிக்கும் விதையை தூய விதையாக சேமித்தல் அவசியம் என்றார் அவர்.

**நுண்நீர் பாசன விழிப்புணர்வுக் கருத்தரங்கம்**

தோட்டக்கலைத் துறை மூலமாக நுண்நீர் பாசனம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் திருப்பூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தேசிய நுண்நீர் பாசன இயக்கத் திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டத்தில் தோட்டக்கலை துறைக்கு 1,330 ஹெக்டேர், வேளாண்மைத் துறைக்கு 550 ஹெக்டேர் பரப்பளவில் நுண்நீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்த இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுண்நீர் பாசனம், மானிய உதவி, அதன் பயன் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருப்பூர் ரமணாஸ் ஹோட்டல் அரங்கில் நுண்நீர் பாசன விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இதற்கு தலைமை வகித்து, கருத்தரங்கை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் துவக்கி வைத்தார். வேளாண் விஞ்ஞானிகள், தோட்டக்கலைத் துறை, வேளாண்மை துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் நுண்நீர் பாசன முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். இதில், விவசாயிகள் நுண்நீர் பாசன மானியம் பெற விண்ணப்பங்கள் அளித்தனர்.

திருப்பூர் தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) மு.தமிழ்ச்செல்வன், வேளாண்மை இணை இயக்குநர் எம்.முகமது ஹலிமுல்லாஷெரீப், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சென்னியப்பன், தமிழ்நாடு வேளாண்மைப்

பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முத்துவேல், தோட்டக்கலை அலுவலர் பெ.சித்தார்த்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 62.90 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 62.90 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 704 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 704 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 8.23 டி.எம்.சி.

**"கூட்டுறவு தேயிலை ஆலைகளில்  ஒரே மாதிரியான விலை வழங்க நடவடிக்கை'**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை ஆலைகளிலும் ஒரே மாதிரியான மாதாந்திர விலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இண்ட்கோசர்வ் பெருந்தலைவர் பி.பி.சிவகுமார் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை ஆலைகளில், 25 ஆயிரத்திற்கும் மேற் பட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகித்து வருகின்றனர். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பசுந்தேயி லைக்கு மாதம் ஒருமுறை குன்னூர் இண்ட்கோசர்வ் நிர்வாகத்தின் மூலம் விலை நிர் ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அந்த மாதத்தில் விற்பனையான தேயிலையை கணக்கிட்டு, நிர்வாகம் மற்றும் உற்பத்திச் செலவுகளை கழித்து விலை நிர்ணயிக்கப்படுகிறது.

நிர்வாகம், உற்பத்திச் செலவுகள் காரணமாக கூட்டுறவு தேயிலை ஆலைகளிடையே ஒரே மாதிரியான விலை இருப்பதில்லை. இந்த விலை வித்தியாசம் காரணமாக, விவசாயிகளிடையே அதிருப்தி ஏற்படுகிறது.

இந்நிலையில் குந்தா கூட்டுறவு தேயிலை ஆலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற இண்ட்கோசர்வ் பெருந்தலைவர் பி.பி.சிவகுமார் கூறியது:

மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கூட்டுறவு தேயிலை ஆலைகள் தொலைதூரத் தில் உள்ள கிராமப்பகுதிகளில் அமைந்திருப்பதால் போக்குவரத்து,

நிர்வாகச் செலவுகள் வேறுபட்டு, அது பசுந்தேயிலை விலை நிர்ணயத்தில் வெளிப்படுகிறது. இருப்பினும் கடந்த சில ஆண்டுகளாக தனியார் தேயிலை ஆலைகளை விட கூடுதல் விலை கூட்டுறவு ஆலைகளில் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் ஒருசில கூட்டுறவு தேயிலை ஆலைகளில் கட்டுபடி விலையை (ரஞதஓஞமப டதஐநஉ) விட குறைவாக விலை வழங்கப்படுவதாக சில அமைப்புகள் கூறிவருகின்றன. இது உண்மையல்ல. கூட்டுறவு தேயிலை ஆலைகளிடையே விலை நிர்ணயத்தில் பெரும் வித்தியாசம் இருக்கக் கூடாது என்ற காரணத்திற்காவும், தனியார் ஆலைகளுக்கு விவசாயிகள் பசுந்தேயிலை விநியோகம் செய்வதை கட்டுப்படுத்தவும் ஒரே மாதிரியான விலை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் கட்டுபடி விலையை விட குறைவாக விலை வழங்கும் கூட்டுறவு ஆலை அங்கத்தினர்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த அதிகப்படியான விலை, ஆலையின் பங்கு லாபத்தொகையாக அது அங்கத்தினர்களுக்கே வழங்கப்படும் என்றார்.

**வறட்சி நிவாரணம் கேட்டு விவசாயிகள் உண்ணாவிரதம்**

தமிழகத்தின் வட மாவட்டங்களுக்கு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் புதன்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை கோட்டாட்சியர் அலுவலகம் எதிரே, அச் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட கிளை சார்பில் இப் போராட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் முல்லை தலைமை வகித்தார்.

பருவமழை பொய்த்ததால் சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்தது. ஆனால், வறட்சியைப் பார்வையிட வந்த மத்தியக் குழுவினர், டெல்டா பகுதிகளை மட்டும் பார்வையிட்டு நிவாரணம் வழங்கினர்.

வட மாவட்டங்களில் மத்தியக் குழு பார்வையிட வேண்டும். எனவே, உடனடியாக தமிழகத்தின் வட மாவட்டங்களுக்கு மத்தியக் குழுவை வரச் செய்து, அம்

மாவட்டங்களின் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் வலியுறுத்தினர்.

**இன்றும் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் இன்றும் மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கன மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதன்கிழமை காலை வரையிலான நிலவரப்படி சின்னக்கல்லாற்றில் 60 மி.மீ. மழை பெய்துள்ளது. தேவாலா, வால்பாறையில் 40 மி.மீ. மழையும், நடுவட்டம், செங்கோட்டையில் 30 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

பெரியாறு, தளி, மேல் ஆலத்தூர், பென்னாகரம், ஆரணி (20 மி.மீ.), உத்திரமேரூர், கூடலூர், செய்யாறு, போடிநாயக்கனூர், பொள்ளாச்சி, பேச்சிப்பாறை, குளச்சல், தேன்கனிகோட்டை (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**கார் சாகுபடிக்கு 5 அணைகள் திறப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடனாநதி, ராமநதி உள்ளிட்ட 5 அணைகளில் இருந்து கார்பருவ சாகுபடிக்கு புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 12,568 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்தார்.

தென்மேற்கு பருவ மழை பெய்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், சேர்வலாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கடனாநதி, ராமநதி அணைகள் நிரம்பின. இதையடுத்து கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து கடந்த ஜூன் மாதம் 20-ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதையடுத்து கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார், கொடுமுடியாறு ஆகிய அணைகள் மூலம் பாசனம் பெறும் பகுதிகளுக்கு தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டதையடுத்து புதன்கிழமை கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார், கொடுமுடியாறு ஆகிய 5 அணைகளில் இருந்து கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

அணைகளில் இருந்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தி தண்ணீர் திறந்தார்.

பாபநாசம் அணையில் 5 மி.மீ. மழையும், கீழ் அணையில் 1.மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 1.மி.மீ. மழையும் பெய்துள்ளது. தொடர்ந்து அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை நீடித்து வருவதால் மணிமுத்தாறு அருவியில் புதன்கிழமை வெள்ளப்பெருக்கு இருந்தது. நண்பகலில் அதிகளவில் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.07.2013**

## சர்க்கரை உற்பத்தி 5.2 சதவீதம் சரிவடையும்:விலைமேலும் உயர வாய்ப்பு

புதுடில்லி:நாட்டின் சர்க்கரை உற்பத்தி, வரும் 2013-14ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.,-செப்.,) 5.2 சதவீதம் குறையும் என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) மதிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவின் ஒரு சில பகுதிகள்,போதுமான அளவிற்கு மழைஇல்லாததால் பாதிக்கப்பட்டுளன. இதனால், கரும்பு சாகுபடி சரிவடைந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால், வரும் சந்தைபடுத்தும் பருவத்தில், சர்க்கரை உற்பத்தி குறையும்.

**பற்றாக்குறை:**நடப்பு 2013-14ம் நிதியாண்டில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 1.5 சதவீதம் குறைந்து, 51.50 லட்சம் ஹெக்டேராக சரிவடையும் என, இஸ்மா மதிப்பிட்டுள்ளது. இருந்த போதிலும், சர்க்கரை உற்பத்தி, அதன் நுகர்வை விட அதிகம் இருக்கும் என்பதால், பற்றாக்குறை ஏற்படாது என, இஸ்மா தெரிவித்துள்ளது.

உலகில், சர்க்கரை உற்பத்தியில், பிரேசில் முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. கடந்த 2012- 13ம் நிதியாண்டில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு, 2013-14ம் நிதி யாண்டில், 2.37கோடி டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.இந்தியாவில், ஓராண்டிற்கான சர்க் கரைத் தேவை, 2.10 - 2.23கோடி டன் என்ற அளவில் உள்ளது.நடப்பு சர்க்கரை சந்தைப்படுத்தும் பருவத்தின் முடிவில், அதா வது, வரும் செப்டம்பர் மாதம், உள்நாட்டு பயன்பாடுபோக, 80 லட்சம் டன் சர்க்கரை (கையிருப்பையும்சேர்த்து) உபரி யாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**கையிருப்பு:**இது, வரும் சந்தைப்படுத்தும் பருவத்தின் துவக்கத்தில், கையிருப்பாக இருக்கும் என்பதால், சர்க்கரை உற்பத்தி குறைந்தாலும், அதனால் பாதிப்பு ஏதும் இருக்காது.நடப்பு பருவத்தில், உத்தரபிரதேசத்தின் கரும்பு பயிரிடும் பரப்பளவு, கடந்த பருவத்தை விட, சாதனை அளவாக, 3.1 சதவீதம் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**நிலுவை தொகை:**நடப்பு ஜூலை நிலவரப்படி, சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை, 4 ஆயிரம்கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.இருந்தபோதிலும், சென்ற 2012-13ம் நிதியாண்டில், உத்தர பிரதேச அரசு, கரும்பு கொள்முதல் விலையை,17 சதவீதம் உயர்த்தியது. நெல்,கோதுமையை விட, கரும்பு பயிரிடு வதில் அதிக வருவாய் கிடைத்ததால், அதை அதிகஅளவில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.இதேபோல், அரியானா, பீகார், ம.பி.,ஆகிய மாநிலங்களிலும், கடந்த பருவத்தை விட, நடப்பு பருவத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்து உள்ளது.

**பரப்பளவு:**வறட்சியால் பாதிக்கப்பட்ட மகாராஷ்டிராவின் ஒரு சில பகுதிகளில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, கடந்த ஆண்டை விட, 12.5 சதவீதம் குறையும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. அதுபோன்று, கர்நாடகாவில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 8 சதவீதம் குறையும். தமிழகத்தில், கடந்த ஆண்டு, தென்மேற்கு பருவ மழை காலத்திலும் (ஜூன்-செப்.,), வடகிழக்கு பருவ மழை காலத்திலும் (அக்.,-டிச.,) குறைந்த அளவிற்கே மழை பெய்தது. இதனால், நடப்பு பருவத்தில், தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு, 15-16 சதவீதம் என்ற அளவில், மிகவும்மோசமாக சரிவடைந்துள்ளது. இத்தகைய காரணங்களால், வரும் சந்தைப்படுத்தும் பருவத்தில், சர்க்கரை உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

**இறக்குமதி வரி:**இந்நிலையில்,நேற்று முன்தினம், சர்க்கரை இறக்குமதி மீதான சுங்க வரியை மத்திய அரசு, 10 சதவீதத்தில் இருந்து, 15 சதவீதமாக உயர்த்தியது. உள்நாட்டை விட, இறக்குமதி சர்க்கரையின் விலை குறைவாக உள்ளதால், விவ சாயிகளை பாதுகாக்கும்நோக்கோடு, இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ஆனால், இந்த வரி உயர்வு மிகக் குறைவு என்றும், 30-40 சதவீத அளவிற்கு வரி விதிக்கப்பட்டால் தான், சர்க்கரை இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு குறையும். இதனால், நடப்பு கணக்கு பற்றாக்குறையும்

குறையும் என, "இஸ்மா' தெரிவித்துள்ளது.
சர்வதேச சந்தையில், சர்க்கரை விலை குறைந்து வரும் நிலையில், மத்திய அரசு, இத்தகைய நடவடிக்கைமேற்கொண்டால், உள்நாட்டில் சர்க்கரை விலை அதிகரிக்கும். இந் நிலையில், வரும் சந்தைப்படுத்தும் பருவத்தில், சர்க்கரை உற்பத்தி குறையும் என்ற மதிப்பீடு காரணமாக, சர்க்கரை விலைமேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என, சந்தையாளர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

**வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க குழு கூட்டம்**

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க நிர்வாகக்குழு கூட்டம் நடந்தது.சங்க அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு அதன் தலைவர் விநாயகமூர்த்தி தலைமை தாங்கினார். செய லாளர் செல்வம் வரவேற்றார். துணைத் தலைவர் பூராசாமி, மேலாண்மை இயக்குனர் சுகந்தலதா மற் றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலா ளர் பாலசுப்ரமணியன் நன்றி கூறினார்.

**மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைவுவிலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

ப.வேலூர்: ஏல மார்க்கெட்டுக்கு வரத்து குறைவால், வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. இது, வாழை பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்தது.
ப.வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, பிலிக்கல்பாளையம், அணிச்சம்பாளையம், பொய்யேரி, நன்செய் இடையாறு, குப்புச்சிப்பாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு, ரஸ்தாளி, பூவன், கற்பூரவள்ளி, மொந்தன் போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்பட்ட வாழைத்தார்களை அறுவடை செய்து,

ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு, ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர். அவற்றை, பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்து, தமிழகம் முழுவதும் விற்பனைக்காக அனுப்புகின்றனர்.வரத்து குறைவாக இருக்கும்போது, வாழைத்தார் விலை உயர்வதும், வரத்து அதிகரிக்கும் போது, விலை குறைவதும் வாடிக்கை. மேலும், விசேஷ காலங்களில், அதன் தேவை அதிகரிப்பதால், விலை உச்சத்தில் காணப்படும். அது, பயிரிட்ட விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில், 700 வாழைத்தார்கள் மட்டுமே விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை, கரூர் மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள், அதிக அளவில் குவிந்தனர். அதனால், போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை, கடந்த வாரத்தை விட அதிகரித்தது.கடந்த வாரம், பூவன் வாழைத்தார் ஒன்று, 300க்கு விலை போனது. ஆனால், நேற்று ஒரு தார், 450 ரூபாய்க்கு விற்பனையானது. 250க்கு விற்பனையான ரஸ்தாளி, நேற்று, 400க்கும், 250க்கு விலைபோன பச்சநாடன், நேற்று, 350 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.அதேபோல், 200 ரூபாய்க்கு விற்பனையான கற்பூரவள்ளி, நேற்று நடந்த ஏலத்தில், 400 ரூபாய்க்கு விற்பனையானது. இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட மொந்தன் காய் ஒன்று, ஐந்து ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று அதிகாலை, 5.30 மணிக்கு துவங்கிய ஏலம், அரை மணி நேரத்தில் முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்த விலை உயர்வு, பயிரிட்ட விவசாயிகளை, மகிழ்ச்சி அடையச் செய்தது.

**உரம் வாங்கும்போது ரசீது பெறவேண்டும்: இணை இயக்குநர்**

பெரம்பலூர்: விவசாயத்திற்கு தேவையான முக்கிய இடுபொருளான உரங்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு 150 கோடி ரூபாய், டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லா முன்பணம் வழங்கிள்ளது. இதை

கொண்டு டான்பெட் நிறுவனம் டி.ஏ.பி., உரத்தினை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் மூலம் விநியோகம் செய்து வருகிறது.இதுதவிர தமிழக அரசு உரங்களின் மீதான நான்கு சதவீத மதிப்பு கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்களித்துள்ளது. இதன் மூலம் 50 கிலோ மூடை ஒன்றுக்கு 11 ரூபாய், முதல் 52 ரூபாய், வரை உரங்களின் விலை குறைந்துள்ளது.தற்போது யூரியா உரங்கள் மட்டும் மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் அதிகளவில் யூரியா உரத்தினை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். யூரியா போன்ற தழைச்சத்தை அளிக்கக்கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் மகசூல் குறைய வாய்ப்புள்ளது.விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண்வள பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொது பரிந்துரையின் பேரில், உரங்களை இட விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். யூரியாவுடன், மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களையும் தவறாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.விவசாயிகளிடேயே சிறிய அளவிலான யூரியா உரங்கள் அதிக பலனை தரக்கூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதம் தான் உள்ளது.எனவே, எந்த வடிவில் இருந்தாலும் எவ்வித சந்தேகமும் இன்றி யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை மட்டும் இட்டு பலனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.உரங்களை வாங்கும் போது தவறாமல் ரசீதினை கேட்டு பெறவும், மூடையில் உள்ள விற்பனை விலையினை சரி பார்த்து வாங்க வேண்டும்.இவ்வாறு வேளாண் இணை இயக்குநர் சங்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

**இதமளிக்கிறது சின்ன வெங்காயம் இனி பதம் பார்க்கும் பல்லாரி**

ராமநாதபுரம்:ராமநாதபுரத்தில், இதமளிக்கும் வகையில் சிறிய வெங்காயம் விலை சரிந்துள்ளது.

ராமநாதபுரத்தில், வாரச்சந்தையில் நேற்று விற்பனைக்கு வந்த சின்ன வெங்காயம்

கிலோ ரூ.50க்கு விற்கப்பட்டது. ஈரப்பதமுள்ள இந்த வெங்காயம், 40க்கு விற்கப்பட்டது. இதே வெங்காயம் சில நாட்களுக்கு முன்பு 100, 80 என விற்றது. பல்லாரி, நேற்று கிலோ 30க்கு விற்றது.

இது, சில நாட்களுக்கு முன் 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதன் விலை இன்னும் சரிய வாய்ப்புள்ளது என்றும், பல்லாரி விலை, இனி உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர். இனி, கண்ணை கசக்காமல் இருந்தால் சரி.

**விவசாயிகளுக்கு கறவைமாடுகள் பராமரிப்பு பயிற்சி**

திருநெல்வேலி:விவசாயிகளுக்கு கறவை மாடுகள் பராமரிப்பு பயிற்சி நடந்தது.வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைத் துறை சார்பில் "அட்மா' திட்டத்தின் கீழ் அம்பலவாணபுரத்தில் விவசாயிகளுக்கு கறவை மாடு பராமரிப்பு பயிற்சி நடந்தது. வள்ளியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மேரி சுகிர்தபாய் துவக்கி வைத்தார்.

பால்வளத் துறை கால்நடை உதவி மருத்துவர் ஜெயகாந்த், வள்ளியூர் பால் பதப்படுத்தும் நிலைய மேலாளர் நிர்மல் ஞானசேகர், ஆவின் கால்நடை மருத்துவர்கள் ஜெயந்தி, மகாலிங்கம், வள்ளியூர் வேளாண்மை அலுவலர் பாலாஜி உட்பட பலர் பேசினர்.குடற்புழு நீக்கம், தடுப்பூசி போடுதல், பசுந்தீவனங்கள், பால் கொள்முதல், பால் பொருட்கள் பதப்படுத்துதல் குறித்து விளக்கப்பட்டன. கால்நடை பண்ணைக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு கால்நடை பண்ணையின் செயல்பாடுகள் விளக்கப்பட்டன. கால்நடைகளுக்கு தேவையான நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரதீப் தேவதாஸ் நன்றி கூறினார்

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.07.2013**

## நீர்வரத்து 33 ஆயிரம் கனஅடி மேட்டூர் அணை நீர்மட்டம் 62 அடியை தாண்டியது



மேட்டூர்: கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை முழு கொள்ளளவை எட்டி உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர் திறந்து விடப்படுகிறது. இந்த நீர் வரத்தால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 2 வாரங்களாக வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 62.35 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 33,394 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 26.47 டிஎம்சி. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 58.88 அடியாக இருந்தது நேற்று3.47 அடி வரை உயர்ந்தது. நீர்வரத்தும் 9,144 கனஅடி அதிகரித்துள்ளது. கடந்த 25ம் தேதி அணையின் நீர்மட்டம் 15 அடியாக சரிந்த நிலையில் 14 நாட்களில் நீர்மட்டம் 47 அடி அதிகரித்துள்ளது. அணைக்கு 30 ஆயிரம் கனஅடி அளவிற்கு நீர் வரத்து தொடர்ந்தால், நீர்மட்டம் இன்னும் இரு வாரங்களில் 90 அடியை தாண்டி விடும். இதனால் இம்மாத இறுதிக்குள் காவிரி டெல்டா பாசனத்திற்கு அணையில் இருந்து நீர் திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். மின்சாரம் உற்பத்தி மும்முரம்: நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மீண்டும் சுரங்க மின் நிலையம் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு மின் உற்பத்தி தொடங்கி உள்ளது. விநாடிக்கு 3

ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுவதால் தினமும் 22 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. நீர்மட்டம் அதிகரிக்கும் போது மின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளனர்.

**மீன் குஞ்சுகள் வளர்ப்பை ஊக்குவிக்க மீன் வளர்ப்பவர்களுக்கு 50 சதவீதம் மானியம்**

நாகர்கோவில், :

நன்கு வளர்ந்த மீன் குஞ்சு விரலிகளை வளர்த்தெடுக்கும் மீன் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 50 சதவீதம் மானியம் வழங்க அரசு உத்தரவிட்டு உள்ளது என்று கலெக்டர் கூறி உள் ளார்.

கலெக்டர் நாகராஜன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் போன்ற நீர் தேக்கங்களும், சுமார் 3,165 ஹெக்டேர் பரப்பில் உள்ள 2,497 குளங்களும் மீன் வளர்ப்புக்கு ஏற்ற நீர்நிலைகளாக கண்டறியப் பட்டு உள்ளன. இந்த நீர் தேக்கங்களிலும், குளங்களிலும் விடுவதற்கு தேவையான மீன் குஞ்சுகள் அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டும், பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் இருந்து பெறப்பட்டும் இருப்பு செய்யப்பட்டு வருகின்றன. குளங்களில் விடுவதற்கு மீன்குஞ்சு விரலி களை விட, நன்கு வளர்ந்த மீன் குஞ்சு விரலிகளே சிறந்ததாக கருதப்படுகிறது. எனவே நன்கு வளர்ந்த மீன் குஞ்சு விரலி களை வளர்த்தெடுக்கும் மீன் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 2 ஹெக்டேர் பரப்பு உள்ள மீன் குஞ்சு வளர்ப்பு குளங்கள் வைத் துள்ள மீன் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்க அரசு உத்தரவிட்டு உள்ளது. எனவே இத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய விரும்பும் மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் தகுதி உள்ள பயனாளிகள் உடனடியாக வடசேரியில் உள்ள மீன் துறை உதவி இயக்குனர் (நீர் வாழ் உயி ரின வளர்ப்பு) அலுவலகத்தை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தகுதி உள்ள நிலங்கள் வைத்து இருக்கும் மீன் குஞ்சு

வளர்க்கும் ஆர்வம் உள்ள இதர விவசாயிகளும் இத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடையலாம்.இவ் வாறு அவர் கூறி உள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.07.2013**

**வைகை அணை நீர்மட்டம் உயர்கிறது: முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

ஆண்டிப்பட்டி,

வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில் அணையில் இருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்று விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.

**வைகை அணை**

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. 71 உயரம் கொண்ட வைகை அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் தேதி அன்று முதல் போக பாசனத் திற்கு தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரத்து 41 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்களில் முதல்போக சாகுபடி நடைபெறும்.

பெரியாறு மற்றும் வைகை அணைகளின் நீர்இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடி யாக இருந்தால் முதல்போக பாசனத்திற்கும், 6 ஆயிரம் மில்லியன் கனஅடி இருப்பு இருந்தால் இரண்டாம் போக பாசனத்திற்கும் தண்ணீர் திறக்கப்படும். இந்நிலையில் கடந்த ஆண்டு போதுமான மழை இல்லாத காரணத்தால் முல்லைப்பெரியாறு மற்றும் வைகை அணைகளின் நீர் மட்டம் மிகவும் குறைவாக காணப்பட்டது.

இதன்காரணமாக கடந்த ஆண்டு வைகை அணையில் இருந்து முதல்போக பாசனத் திற்கு தண்ணீர் திறக்கப் படா மல் முதல் போக விவசாயம் நடைபெறவில்லை. அதே போன்று அணை நீர்மட்டம் குறைவாக காணப்பட்டதால் இந்த ஆண்டும் வைகை அணையில் இருந்து முதல் போக பாசனத் திற்கு தண்ணீர் திறக்க முடியாத சூழ்நிலை கடந்த மாதம் ஏற் பட்டது. மேலும் வைகை அணையின் நீர்இருப்பு 'கிடு,கிடு'வென குறைந்ததால் மதுரை மாநக ராட்சியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயமும் உருவானது.

இதற்கிடையே கடந்த சில வாரங்களுக்கு முன்பு கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது. இதைஅடுத்து பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதி

கரித் தது. மேலும் பெரியாறு அணையில் இருந்து பாசனத் திற்காகவும், குடிநீர் தேவைக் கும் தண்ணீர் திறக்கப் பட்டது.

**பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு?**

இதைத்தொடர்ந்து வைகை அணைக்கு தண்ணீர் வரத்து தொடங்கியது. வறண்டு போகும் நிலையில் இருந்த வைகை அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டதால் அணையின் நீர்மட்டம் ஒருநாளைக்கு சுமார் அரை அடி என்ற அளவில் உயர்ந்தது. இதன் காரணமாக கடந்த சில நாட் களில் அணையின் நீர்மட்டம் 10 அடிக்கும் மேலே உயர்ந்து அணை நீர் மட்டம் நேற்று 46.62 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 961 கன அடி நீர் வரத்து காணப் படுகிறது.

இதை அடுத்து அணையில் இருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்ற எதிர் பார்ப்பு விவசாயி களிடையே எழுந்துள்ளது.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, அவர்கள் கூறியதாவது:

பொதுவாக பெரியாறு வைகை அணை களின் மொத்த நீர்இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கனஅடிக்கு மேலே இருந்தால், வைகை அணையில் இருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியும்.

தற்போது தொடர் மழை காரணமாக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை அதிகமாக பெய்து, அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப் பட்டால், வைகை அணையின் நீர்மட்டம் மேலும் அதிகரிக் கும் வாய்ப்பு உள்ளது. அது போன்ற சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் வைகை அணையில் இருந்து முதல்போக பாசனத் திற்கு தண்ணீர் திறக்க அரசு உத்தரவிடும் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித் தனர்.

தற்போது பெரியாறு மற்றும் வைகை அணைகளின் மொத்த நீர்இருப்பு 4 ஆயிரத்து 959 மில்லியன் கனஅடியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள்**

ராமநாதபுரம்,

சிறு, குறு விவசாயிக ளுக்கு 100 சதவீத மானி யத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள் வழங் கப்பட உள்ளன.

<u>சொட்டு நீர்பாசனம்</u>

சொட்டு நீர் பாசனம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவி லான நுண்ணீர் பாசன கருத் தரங்கு நடைபெற்றது. நிகழ்ச் சியை மாவட்ட கலெக்டர் நந்தகுமார் தொடங்கி வைத் தார். தோட்டக்கலை துணை இயக்குனர் இளங்கோவன் வரவேற்றார். நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் நந்த குமார் பேசியதாவது:– இந் தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் 100 சதவீத மானி யத்தில் சிறு, குறு விவசாயிக ளுக்கு சொட்டு நீர்பாசன கருவிகள் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை பயிர்க ளான மா, நெல்லி, கொய்யா, சப்போட்டா, பப்பாளி மற் றும் வாழை போன்ற பழ மரங் களுக்கும், மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற காய்கறி பயிர்களுக்கும் மல்லிகை போன்ற பூச்செடிகளுக்கும், தென்னை, கரும்பு, பருத்தி, சோளம் போன்ற வேளாண்மை சார்ந்த பயிர்க ளுக்கும் சொட்டு நீர் பாசன கருவி அமைத்து விவசாயிகள் பயன்பெறலாம். சொட்டு நீர் பாசனம் செய்வதன் மூலம் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பள வில் பயிர்கள் சாகுபடி செய் யலாம்.

<u>சிறு, குறு விவசாயிகள்</u>

மேலும் உர வகைகள், பூச்சி, பூஞ்சான மருந்துகளை சொட்டு நீர் பாசன கருவி மூலம் பயிர்களின் வேர்களுக்கு பாய்ச்சுவதன் மூலம் இடு பொருட்களின் செலவு, சாகு படி செலவு போன்றவை மிக வும் குறைவதுடன், தேவை யான நீரை பயிரின் வேர்ப் பகுதியிலேயே அளிக்க முடி யும். தேசிய நுண்ணீர் பாசன திட்டம் மூலம் சொட்டு நீர் பாசன கருவிகளுக்கு மானிய உதவி அளிக்கப்படுகிறது. தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும்

இத்திட்டத்தில் ராமநாதபு ரம் மாவட்ட விவசாயிகள் முழுமையாக பயன்பெறலாம். விவசாயிகள் மானியம் பெற தேவையான சான்றுகளை வெள்ளிக்கிழமைதோறும் தாலுகா அலுவலங்களில் பெற் றுக்கொள்ள ஏதுவாக அலுவ லர்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டுள்ளது. விண்ணப் பித்த ஒரு வார காலத்திற்குள் சான்று வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசி னார்.

<u>விளக்கம்</u>

நிகழ்ச்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் சவுந்திர ராஜன், சொட்டு நீர்பாசன நிறுவன உழவியல் நிபுணர் செந்தில்குமார், உழவியல் துறை உதவி பேராசிரியர் துக்கையண்ணன், வேளாண் பொறியியல்துறை உதவி செயற் பொறியாளர் சண்முகம், கமுதி வட்டார முன்னோடி விவசாயி சண்முகமூர்த்தி ஆகியோர் சொட்டு நீர் பாசன திட்டம் குறித்து பேசி னர். ஏற்பாடுகளை வட்டார தோட்டக்கலை அலுவலர் பானுபிரகாஷ் செய்திருந்தார். முடிவில் தோட்டக்கலை உதவி இயக்குனர் கோவிந்த ராஜ் நன்றி கூறினார்.

**கடலூர் மாவட்டத்தில் 1,750 எக்டரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு மானியம் முதல் கட்டமாக ரூ.2½ கோடி ஒதுக்கீடு**

கடலூர்

கடலூர் மாவட்டத்தில் 1750 எக்டரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு மானியம் வழங்க உள்ளது. இதில் முதல் கட்டமாக 2½ கோடி ரூபாயை அரசு ஒதுக்கி உள்ளது.

<u>சொட்டுநீர் பாசனம்</u>

வேளாண்மையில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த உதவும் அற்புதமான தொழில்நுட்ப முறை சொட்டுநீர் பாசன முறையாகும். சொட்டு நீர் பாசனம் அமைக்க அதிக செலவு ஆகுவதால் விவசாயிகள் தயங்குகிறார்கள்.

இதனால் 5 ஏக்கர் வரை சொந்த நிலம் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், 12½ ஏக்கர் வரை சொந்த நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர் பாசனத்தை தமிழக அரசே அமைத்து தருகிறது.

<u>சிறப்பு முகாம்</u>

இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 1,750 எக்டரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க தமிழக அரசு நிதி ஒதுக்க உள்ளது. இதில் முதல் கட்டமாக 250 லட்சம் ரூபாயை தமிழக அரசு வழங்கி உள்ளது.

இதனால் இத்திட்டம் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கடலூர் மாவட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் மலையக பயிர்கள் துறை சொட்டுநீர் பாசனம் குறித்த சிறப்பு முகாமை கடலூர் டவுன்ஹாலில் நேற்று நடத்தியது.

<u>கலெக்டர் தொடங்கி வைத்தார்</u>

இந்த முகாமுக்கு கலெக்டர் கிர்லோஷ்குமார் தலைமை தாங்கி பேசினார். தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் ராமலிங்கம் வரவேற்று பேசினார். கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ஜெயச்சந்திரன், பாலூர் காய்கறி ஆராய்ச்சி

நிலைய தலைவர் கலைமணி, விருத்தாசலம் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் அருணாசலம், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ராஜகோபால், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராமச்சந்திரன், தோட்டக்கலை அதிகாரிகள் வசந்த், பிரேமா, முருகன், மோகன்தாஸ் ஆகியோர் சொட்டுநீர் பாசனம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இதில் 250 விவசாயிகள் கலந்து கொண்டனர். சொட்டுநீர் பாசனம் பற்றி படக்காட்சி மூலமும் விவசாயிகளுக்கு விளக்கி காண்பிக்கப்பட்டது. இதையொட்டி பல்வேறு நிறுவனங்களின் சார்பில் சொட்டுநீர் பாசன கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தன. இதை விவசாயிகள் பார்வையிட்டனர்.

**பெருந்துறை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ரூ.25 லட்சத்துக்கு ஏலம்**

பெருந்துறை

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 1,183 மூட்டைகள் (58 ஆயிரம் கிலோ) கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தது.

இதில் முதல் தரம் கிலோ 44 ரூபாய் 55 காசு முதல் 46 ரூபாய் 10 காசு வரையும், இரண்டாம் தரம் 34 ரூபாய் 15 காசு முதல் 43 ரூபாய் 75 காசு வரையும் ஏலம் போனது.

<u>ரூ.25 லட்சத்துக்கு ஏலம்</u>

இன்று நடந்த ஏலத்தில் கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது.

கொப்பரை தேங்காய் கடந்த வாரத்தை விட இந்த வாரம் ஒரு ரூபாய் குறைவாக விற்றது. தேங்காய் எண்ணையின் விலை குறைந்ததே கொப்பரை தேங்காயின் விலை வீழ்ச்சிக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.